0633

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 06

**EPU6332- ஆரம்பக்கல்வியில் சமகால எழுவினாக்கள்**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

நேரம்: பி.ப. 01.30 - பி.ப 03.30

திகதி:- 17.03.2024

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி – I

1. வரைவிலக்கணமொன்றை பயன்படுத்தி "ஒப்பீட்டு கல்வி" என்பதனை விளக்குக.
2. உமது சொந்த மொழி நடையில் "பல் இன சமூகம்" என்பதனை விளக்குக.
3. கல்வி செயன்முறையில் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க கொள்கையாளர்கள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இரண்டு (02) நடவடிக்கைகளை பற்றி கலந்துரையாடுக.
4. இலங்கையின் ஆரம்பக்கல்வியில் அடையாளப்படுத்தப்படுகின்ற பாடசாலை முகாமைத்துவத்தின் பிரச்சினைகள் மூன்றை (03) எழுதுக. அவற்றில் ஒன்றைச் (01) சுருக்கமாக விளக்குக.
5. வளர்ந்துவரும் நாடுகளின் பண்புகள் நான்கினை (04) எழுதுக.
6. ஐக்கிய இராச்சியத்தில் (இங்கிலாந்தில்) சட்டபூர்வ சட்டகம், ஆரம்பப் பாடசாலைகளை மூன்று வகைகளாக பிரிக்கிறது. அம்மூன்று (03) பாடசாலை வகைகளையும் பெயரிடுக.
7. ஐக்கிய இராச்சியத்தில் (இங்கிலாந்தில்) ஆரம்பக்கல்வியின் தேசிய கலைத்திட்டத்தில் 5 - 7 வருடங்களின் வயதுகளுக்கிடையிலான பிள்ளைகளுக்கு பொருத்தமான ஐந்து (05) பாடங்களை பெயரிடுக.
8. ஜப்பானின் ஆரம்பக்கல்வி தொடர்பாக சுருக்கமான அறிமுகத்தினை தருக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. **i.** இலங்கையில், கல்வியின் தரத்தினை முன்னேற்றமடைய செய்வதற்கு ஒப்பீட்டு கல்வியை எவ்வாறு பயன்படுத்தமுடியும் என்பதனை உதாரணங்களுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**ii.** "கல்வி சீர்திருத்தங்களின் வெற்றி, பங்குதாரர்களின் பரவலான ஏற்றுக்கொள்ளலை பொறுத்து அமைகிறது." இக்கூற்றை ஏற்றுக்கொள்கிறீர்களா? உமது பதில்களை உண்மைக்காரணிகளுடன் நியாயப்படுத்துக.

**(10 புள்ளிகள்)**

10. **i.** சமூகங்களின் பன்முகத்தன்மை / பன்மைத்தன்மை காரணமாக கல்வித்துறையில் எழுகின்ற பிரச்சினைகள் ஐந்து (05) இனைச் சுருக்கமாக கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

**ii.** ஆரம்ப வகுப்பு ஆசிரியர் என்ற வகையில், சமத்துவத்தினை உறுதி செய்ய பல் இன சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுடன் எவ்வாறு பணியாற்றுவீர்கள் என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

11. **i.** “இலங்கையின் ஆரம்பக்கல்வியுடன் தொடர்புடைய பிரச்சினைகளின் மத்தியில், வகுப்பறை கற்பித்தல்-கற்றல் மற்றும் மாணவர் அடைவுநிலை என்பன பிரதான பிரச்சினைகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன.” அடையாளப்படுத்தப்பட்ட ஐந்து (05) பிரச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**ii.** மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்குரிய உமது ஆலோசனைகளை தருக.

**(10 புள்ளிகள்)**

12. **i.** இலங்கை மற்றும் பின்லாந்தின் ஆரம்பக்கல்வியின் புதிய போக்குகளை ஒப்பிட்டு விசாரணை செய்க.

**(10 புள்ளிகள்)**

**ii.** இலங்கையின் ஆரம்பக்கல்வி அபிவிருத்திக்காக ஏனைய நாடுகளின் ஆரம்பக்கல்வி செயன்முறைகள் பின்பற்றப்படுதலை உதாரணங்களுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

13. **i.** இலங்கையின் கல்வியில் உலகமயமாதல் எவ்வாறு பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கிறது என்பதனை உதாரணங்களுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**ii.** பல்வகை சமூகங்களில் உலகமயமாதலின் மூன்று (03) நேர்நிலை மற்றும் மூன்று (03) எதிர்மறையான விளைவுகளை பகுப்பாய்வு செய்க.

**(10 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -